செய்திப் பணிப்பாளர் / செய்தி ஆசிரியர் 2015.07.30

# ஊடக அறிவித்தல்

## விவசாயம் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் : பொருளாதாரத் தொகைமதிப்பு 2013/14

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2013/14 ஆகிய வருடங்களில் முதன் முறையாகப் பொருளாதாரத் தொகைமதிப்பொன்று நடாத்தப்பட்டது. இதன் மூலம் பொருளாதாரத்தின் மிக முக்கிய துறைகளான விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைகள் ஆகிய துறைகள் கணக்கெடுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்போது விவசாயத் துறையின் தகவல் சேகரிப்பானது **"விவசாயக் கணக்கெடுப்பு"** என்பதன் கீழ் நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. இதன் முதலாவது கட்டத்தின் கீழ் பெருந்தோட்டங்களை நிரற்படுத்தல் 2013 ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய சாராம்ச அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஏனைய மூன்று கட்டங்களின் கீழ் பெருநில விவசாயப் பிரிவுகளில் (பெருந்தோட்டம்) தகவல் சேகரித்தல் மற்றும் சிறுநில விவசாயப் பிரிவுகளை நிரற்படுத்தித் தகவல் சேகரித்தல் 2014 ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய அடிப்படைத் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் நாட்டின் மொத்த விவசாயக் கூறுகள் மற்றும் விவசாயச் செய்கையாளர்களின் எண்ணிக்கை, வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் நில விஸ்தீரணம், பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற விடயங்கள் உள்ளடங்கலாகச் சேகரிக்கப்பட்ட தகவல்கள் தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களுக்கமைய இலங்கையின் மொத்த விவசாயச் செய்கையாளர்களின் எண்ணிக்கை 4,291,395 எனப் பதிவாகியுள்ளது. இது 2002 இல் நடைபெற்ற தொகைமதிப்பில் பதிவாகிய விவசாயச் செய்கையாளர்களின் எண்ணிக்கையை விட 33.4% அதிகரிப்பாகும். பயிர்ச்செய்கை நிலத்தினைக் கவனத்தில் கொண்டால் அது 5,449,525 ஏக்கர்கள் (2,205,392 ஹெக்ரேயர்கள்) எனப் பதிவாகியுள்ளதுடன் அது 2002 தொகைமதிப்பில் பதிவாகியிருந்த பெறுமதியை விட 13.6% அதிகரிப்பாகும். பிரதான பொருளாதாரப் பயிர்களான தேயிலை, இறப்பர் செய்கையின் நில விஸ்தீரணம் 2002 தொகைமதிப்பு வருடத்தை விட முறையே 1.8% , 3.8% இனால் அதிகரித்துள்ளது. தெங்குச் செய்கையின் நில விஸ்தீரணம் முறைசார் செய்கையின் கீழ் 438,028 ஏக்கர்களாகப் (177,268 ஹெக்ரேயர்கள்) பதிவாகியுள்ளதுடன் விசிறல் செய்கையின் கீழ் செவ்விளநீர் மரங்கள் உள்ளடங்கலாக மொத்த மரங்களின் எண்ணிக்கை 42,013,773 ஆகப் பதிவாகியுள்ளது. கால்நடை வளர்ப்பினைக் கவனத்தில் கொண்டால் மொத்த மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் எண்ணிக்கை 2002 தொகைமதிப்பு வருடத்தை விட முறையே 7.2% இனாலும் 21.8% இனாலும் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்தத் தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கை திணைக்களத்தின் இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. (www.statististics.gov.lk)

கலாநிதி ஏ.ஜே. சதரசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தொலைபேசி : 011 2147007/ 011 2147020
இணையம் : www.statistics.gov.lk